தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர். வெள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு

மலர். 7 திருவள்ளுவர் ஆண்டு 2019 — ஆடி 30 — 14-8-88 இதழ் . 5

தொழுநோய் — ஒலி - ஒளிப்பட வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழகமும், கும்பகோணம் தாய இருதய ஆண்டவர் தொழுநோய் மருத்துவமனையும்இணைந்து தயாரித்த 'தொழுநோய்' பற்றிய ஒலி–ஒளிப்பட வெளியீட்டு விழா 29-7-'88 வெள்ளி மாலை 5 மணியளவில் தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது.

விழாவிற்குத் தாய இருதய ஆண்டவர் மருத்துவமனை டாக்டர் டி.டி.பளாந்தே தலைமை வகித்தார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்திய லிங்கம் ஒலி–ஒளிப்படத்தை வெளியிட, தாயஇருதய அண்டவர் மருத்துவமனை நிர்வாகி சகோதரி நோவானா படப் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி உதவிப் பேராசிரியர் டாக்டர் சு.நரேந்திரன், தமிழ்ப்பல்கலைக்கழக நாடகத் துறைப் பேராசிரியர் இராமானுசம் ஆகியோர்வாழ்த்திப் பேசினர். தமிழ்ப் பல்கலைக்கழக நாடகத் துறையைச் சார்ந்த திரு இரா.இராசு, படம்பற்றிய விளக்கவுரை வழங்கினார். தாய இருதய ஆண்டவர் மருத்துவமனைத் தொழு நோயாளிகளின் மறுவாழ்வு அதிகாரி பி.கே. கோபால் வரவேற்புப் பேசினார். தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறையைச் சார்ந்த முனைவர் கு. முருகேசன் நன்றியுரையுடன் விழா நிறைவுற்றது.

நூல்கள் 50% விலைக் குறைப்பு

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஏழாம் ஆண்டு விழாவையொட்டி 1988 செப்தம்பர் மாதம் முழுவதும் ஒரு மாத காலத்திற்குத் தமிழ்ப் பல்கலைக்கழக நூல்கள் (களஞ்சியங்கள் தவிர) அவற்றின் பழையவிலையில் 50% குறைத்து விற்கப் படும்.

இராமாயணம், சிலப்பதிகாரம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் திட்டம்

பட்டுக்கோட்டையில் நடைபெற்ற கம்பன் விழாவில் தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. பத்மநாபன் கலந்து கொண்டு தொடக்கவுரை நிகழ்த்தினார். தமிழ் இலக்கியங்களை வெளிநாட்டினரும் படித்தறிய வேண்டும் என்பதற்காக இராமாயணம், சிலப்பதிகாரம், மற்றும் சங்ககால இலக்கியங்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும், இப்பணிக்கு உரு. 30 இலட்சம் செலவிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்ப் புலவர்கள், அறிஞர்கள், வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்று இதற்காக அமைக்கப்படும் என்று ஆளுநரின் ஆலோசகர் கூறினார்.

களஞ்சியங்கள் உருவாக்க தமிழக அரசு நிதியுதவி

உலகமெல்லாம் பரந்துகிடக்கும் அறிவுச் செல்வங்களைத் தமிழ் மக்கள் அறிந்திட பிரிட்டன், அமெரிக்கா முதலான நாடுகளில் வெளிவந்துள்ள கலைக் களஞ்சியங்களைப் போன்று தமிழ் மொழியில் வெளியிடத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டு அறிவியல் களஞ்சியம் 20 தொகுதிகள், வாழ்வியற் களஞ்சியம் 14 தொகுதிகள் வெளியிடத் திட்டமிட்டு, அவற்றில் வாழ்வியற் களஞ்சியம் 6 தொகுதிகளும், அறிவியல் களஞ்சியம் 3 தொகுதிகளும் ஆக, 9 தொகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றைத்தவிர, சங்க இலக்கியச் செய்திகளை எடுத்துரைக்கும் சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் 2 தொகுதிகள் வெளியாகியுள்ளன.

அறிவியல் மற்றும் வாழ்வியற் களஞ்சியங்களை உருவாக்கும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள, நடப்பு நிதியாண்டில் (1988-89) தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தமிழக அரசு உரு. 5 இலட்சம் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

5 ஆண்டுகளில் 3 அருங்காட்சியகங்கள்

தமிழ்ப்பல்கலைக்கழகம் மூன்று அருங்காட்சியகங்களை அமைக்கும் ஐந்தாண்டுத்திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்ற உரு.6 கோடி செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தஞ்சாவூர், இராமநாதபுர மாவட்டத்திலுள்ள மண்டபம், உதகமண்டலம் ஆகிய மூன்று இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப்படவுள்ளன. இத்திட்டங்கள் ஐந்தாண்டுக்குள் நிறைவு பெறும்.

கணிப்பு மையப்புதிய கட்டடத்திற்கு நிதியுதவி

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கணிப்புமையத்திற்காகப் பல்கலைக்கழகத்தின் புதியவளாகத்தில் உரு.20 இலட்சம் செலவில் புதிய அறிவியல் புலம் ஒன்று கட்டப்படவுள்ளது.

இப்புதிய கட்டடத்திற்கு அரசு உரு. 10 இலட்சம் வழங்க ஒப்புக்கொண்டு முதல் தவணையாக உரு. 2.5 இலட்சம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக நல்கைக்குழு இப்பணிக்கு நடப்பு ஆண்டில் உரு. 4.5 இலட்சம் கொடுத்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஒலி-ஒளி நூலகம்

29-7-'88 அன்று தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகத்தில் நடைபெற்ற தொழுநோய் - ஒலி-ஒளிப்பட வெளியீட்டு விழாவில் பேருரை நிகழ்த்திய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தமிழ்க்கலை, பண்பாடு, கலாச்சாரம், நாகரிகம் முதலியவற்றைச் சித்திரிக்கும் 1000 ஒலி-ஒளிப் படங்கள் கொண்ட நூலகம் ஒன்று தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உருவாக்கப்படவுள்ளது என்று கூறினார். இதுவரை உரு. 5 இலட்சம் செலவில், தமிழ் இலக்கியத்தில் -9, தெருக்கூத்துப் படங்கள்-7, பொம்மலாட்டம் போன்ற கிராமியக் கலைகள் தொடர்பான படங்கள்-11, இசை நாடகத்தில்-7, நாடகங்கள்-21, முதியோர் கல்விப் படங்கள்-5 என மொத்தம் 60 படங்களைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தயாரித்துள்ளது என்றும் கூறினார்.

உதகையில் அருங்காட்சியகம்

மலைவாழ் மக்கள் கலை, கலாச்சாரம் தொடர்பான அருங்காட்சியகம் உரு. 2 கோடி செலவில் உதகமண்டலத்தில் அமைக்கப்படவுள்ளது. இதில் 36 இடங்களைச் சார்ந்த மலைவாழ் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறைகளைச் சித்திரிக்கும் பொருள்கள் சேகரித்துவைக்கப்படும். அவர்களின் சமூக வாழ்க்கையில் பயன்படுத்திய பொருள்கள், கலாச்சார முறைகள் ஆகியவற்றைச் சித்திரிக்கும் நடமாடும் அருங்காட்சியகம் அமைய இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வருங்காட்சியகம் அகில உலக ஆராய்ச்சி மையமாகத்திகழும். உலகிலுள்ள அனைத்துப் பழங்குடி மக்களைப்பற்றியும் ஆராய்ச்சிகள் நடைபெறும்.

ஆட்சிக் குழுவிற்குப் புதிய உறுப்பினர்

தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய ஆட்சிக்குழு உறுப்பினராக, திருமதி செளந்தரா கைலாசம் அவர்களைத் தமிழகஆளுநர் மேதகு பி.சி.அலெக்சாண்டர் அவர்கள் நியமித்துள்ளார்.

காஞ்சிபுரம் தத்துவமையக் கருத்தரங்கு

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவ மையத்தின் சார்பில் 21, 22-7-'88 ஆகிய இருநாள்கள் "மனித வரலாற்றின் பொருளும் நோக்கமும்"பற்றிய கருத்தரங்கு, தத்துவமையக் கருத்தரங்கக்கூடத்தில் நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெ.சின்னையன் தலைமையேற்றுத் தொடக்கவிழாப் பேருரை நிகழ்த்தினார்.

முனைவர் இரா.கோலப்பப்பிள்ளை, முனைவர் செ. அரங்கசாமி, திரு எஸ்.பாலசுப்பிரமணியம், பேரா. மாதவன் முதலியோர் பங்கேற்று முறையே ஸ்ரீமத்வர், தாயின்பீ, ஏகல், மார்க்சு, ஸ்ரீசங்கரர், இராமலிங்க அடிகளார், கீதை சொன்ன கண்ணன், மெய்கண்டார், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ இராமானுசர், இமானுவேல் காண்ட் ஆகியோரின் தத்துவங்கள், வரலாற்றில் பெற்ற இடங்கள்குறித்து ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர்.

இக் கருத்தரங்கு நான்கு அமர்வுகளாகநடைபெற்றது. முனைவர் பி.நாகராஜராவ், முனைவர் டி.ஆஞ்சநேயலு, பேராசிரியை திருமதி ஜெயா முனிசாமி, முனைவர் சி.கே. இராமன், முனைவர் பி.கே.சுந்தரம், முனைவர் எஸ்.ஓ. இராமகிருட்டிணன், முனைவர் ஆர். கோபாலகிருட்டிணன்,

தத்துவ மைய இயக்குநர் முனைவர் பி.கே.சுந்தரம் வரவேற்புரை நிகழ்த்த, தத்துவமையச் சிறப்பாய்வாளர் முனைவர் இரா.கோலப்பப்பிள்ளை நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

தஞ்சை, மண்டபம் - அருங்காட்சியகங்கள்

தஞ்சாவூரில் அமைய இருக்கும் அருங்காட்சியகம், பண்டைய தமிழ்க் கலாச்சாரத்தை மையமாகக் கொண்டதாகும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை பற்றிய அனைத்துக் கருத்துக்களும் இக்காட்சி விழாவில் நிறுவப்பெறும். ஒவ்வொரு மாநிலத்துக்கும்தனித் தனியே கட்டடக்கலைச் சிறப்பும் உண்டு. 32 மாநிலங்களின் கட்டடக் கலையை விளக்கும் வகையில் தனித் தனி வீடுகள் அமைக்கப்படும் அந்தந்த மாநிலத்தைச் சித்திரிக்கும் வீட்டிற்குள் அந்தந்த மாநிலத்து மக்களின் கலை, கலாச்சாரத்தை விளக்கும் சிற்பங்கள், கலைப்பொருள்கள், பொம்மைகள், தொழில்முறைக் கட்டடமாதிரிகள் மற்றும் மக்களின் சமுதாய வாழ்வினை விளக்கும் சமையலறைகள், அடுப்புகள், பாத்திரங்கள், முதலியனவும் காட்சிப் படுத்தப்படும். மாநில வீடுகளுக்கு நடுவில் தமிழகக் கட்டடக் கலையோடு கூடிய மாளிகை நடுநாயகமாக விளங்கும். இதற்குள் சங்க கால மக்களின் வாழ்க்கை முறைகள் தமிழ்மக்களின் கலை, கலாச்சாரங்களைஎடுத்துக் காட்டும் பொருள்கள் அனைத்தும் அமைக்கப்படும்.

மண்டபத்தில் ஆழ்கடல் தொல்லியல் அருங்காட்சியகம் அமைக்கப்படும். இது மண்டபத்தில் ஏற்கனவேஉள்ள அருங்காட்சியகத்தின் விரிவாக்கத் திட்டமாக அமையும். ஆழ்கடல் அருங்காட்சியகம் அமைக்கப்படுவது இந்தியாவிலேயே முதன் முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய அறக்கட்டளைகள்

பேராசிரியர் மது. ச.விமலானந்தம் அவர்களால் சொந்த முறையில் உரூ. பன்னிரண்டாயிரத்தில் பேரறிஞர் பவானந்தர் நினைவு அறக்கட்டளை நிறுவப் பெறுகிறது.

இலக்கணம், இலக்கியம், நாடகம், நூலகம், காவல்துறை, சட்டவியல் ஆகியவற்றில் பவானந்தர் தொண்டு ஆற்றியமையால் இத்துறைகளில் சொற்பொழிவுகள் ஆண்டு தோறும் நிகழ்த்தப்படும்.

திரு ஏ.வி.மெய்யப்பச் செட்டியார், திரு நெ.து. சுந்தரவடிவேலு, திரு ம.பொ.சிவஞானம் ஆகியோர் தமிழுக்கும், தமிழருக்கும் ஆற்றிய தொண்டுகளைப் பாராட்டும் வகையில் இந்த அறக்கட்டளை திரு ந.சஞ்சீவி அவர்களால் உரூ. இருபதாயிரத்தில் நிறுவப்பெறுகிறது.

திரைப்படத் திறனாய்வு உள்ளிட்ட தமிழ் இலக்கிய, கலை, அறிவியல் ஆய்வுகட்கு, அறக்கட்டளையின் சார்பில் ஆண்டுதோறும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்
பதிவஎண் 15033/82×7

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா

இ.அ.அ. மட்டும்.

37) திருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வெளியீடுகள்

1. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி ஆறு

ஏகாம்பரநாதர் உலா முதல் கனோபிக்குச் சாடிகள் ஈறாக உள்ள பல்வேறு தலைப்புகளில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. நூல் நிலையங்களிலும் அறிஞர் பெருமக்கள் இல்லங்களிலும் இடம்பெற வேண்டிய அறிவுக் களஞ்சியம்.

பக்கங்கள்: 1018 விலை: உரு. 300/-

2. வியாசரும் வில்லியும் ஒரு திறனாய்வு

ஆசிரியர்: ச. கு. கணபதி

வடமொழியில் வியாசர் இயற்றிய மகாபாரத மூலநூலையும் தமிழ்மொழியில் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரத வழிநூலையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து வியத்தகு செய்திகளை ஆசிரியர் வழங்குகிறார். படித்துச் சுவைக்கத் தகுந்த நூல் இது.

பக்கங்கள்: 247 விலை: உரு. 24/-

3. நுண்ணலகுகளும் இராகங்களும்

ஆசிரியர்: து. ஆ. தனபாண்டியன்

இராகங்களில் என்னென்ன சுரங்கள் நுண்ணலகுடன் (நுட்பச் சுருதியுடன்) வருகின்றன; அவற்றின் அளவுகள் என்ன என்பவற்றைத் திட்டவட்டமாக அறிவிக்கும் நூல் இது. நம் இசையின் இனிமையும் சிறப்பும் இந்த நுண்ணலகுகளில்தான் உள்ளன. இந்நுண்ணலகுகளில் ஒலித் துடிப்புகள் படங்கள் மூலமும் விளக்கப்பட்டு உள்ளன. இசைக் கலைஞர்கட்கு இந்நூல் ஒரு கருவூலம்.

பக்கங்கள்: 378 விலை: உரு. 50/-

4. மூவர் திருமுறைப்பாடல்கள்

தொகுப்பாசிரியர்கள்: பேரா. து. ஆ. தனபாண்டியன்
திருமதி ஞானா குலேந்திரன்
செல்வி பி. எஸ். லோச்சன்

இதுவரை சுர, தாளக் குறிப்புகளோடு வெளிவராத மூவர் அருளிய எழுபத்தைந்து தேவாரப் பாடல்களுக்கு உரிய சுர, தாளக் குறிப்புகளை இந்நூல் விளக்குகிறது. தமிழிசை மரபு பாதுகாக்கப் பட வேண்டும் என்ற பெருநோக்கோடு உருவானது. இசைப் பேரறிஞர்களின் பெருமுயற்சியில் தோன்றிய இந்நூல் இசைபயிலும் மாணாக்கர்கட்கும் இசை ஆய்வாளர்கட்கும் பயன்படுவது. ஓதுவாமூர்த்திகளின் படங்கள் கொண்டது.

பக்கங்கள்: 132 விலை: உரு. 50/-

5. குழந்தைகளுக்குக் காந்தி

ஆசிரியர்: திருமதி அரோமா குளோரிசாம்

பக்கங்கள்: 72 விலை: உரு. 10/-

6. சிறுவர்களுக்கு நேரு

ஆசிரியர்: பா. சுப்பிரமணியம்

பக்கங்கள்: 43 விலை: உரு. 5/-

உறுப்பினர் கட்டண விவரம்

செய்திமலர் / நியூஸ் புல்லட்டின்

ஓராண்டு	உரு. 5/-	$ 4
ஈராண்டு	உரு. 10/-	$ 8
மூவாண்டு	உரு. 12/-	$ 10

தமிழ்க் கலை / தமிழ் சிவில்லேசன்

தனியிதழ்	உரு. 15/-	$ 3
2 இணைப்பிதழ்	உரு. 30/-	$ 6
ஓராண்டு	உரு. 60/-	$ 15
ஐந்தாண்டு	உரு. 240/-	$ 60

களஞ்சிய வெளியீடுகள்

அறிவியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு. 300/-
" "	தொகுதி-2	உரு. 300/-
" "	தொகுதி-3	உரு. 300/-
வாழ்வியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு. 300/-
" "	தொகுதி-2	உரு. 300/-
" "	தொகுதி-3	உரு. 300/-
" "	தொகுதி-4	உரு. 300/-
" "	தொகுதி-5	உரு. 300/-
" "	தொகுதி-6	உரு. 300/-
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்	தொகுதி-1	உரு. 250/-
" "	தொகுதி-2	உரு. 250/-

கழிவு: 25% அஞ்சற் செலவு தனி

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001